# அறநெறி அமுதம்

ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ் – 55

ஆடி – புரட்டாதி 2014




இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு – 06

அமுதம் 14

துளி 3



கல்வி, கல்வி, கல்வி - இது ஒன்றே இப்போது நமக்கு தேவை. சமுதாயத்திலுள்ள ஆண், பெண் அனைவருக்கும் உண்மைக்கல்வியை அளிப்பதே நமது கடமை.

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய சுயவலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்வியே இன்றைய தேவை. பாமரர்களாகிய



பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவி புரியும் ஊக்கத்தையும், சிங்கங்கள் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன்படாத கல்வி, அதை கல்வி என்று சொல்வது பொருத்தமா? எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனை தனது சொந்தக்கால்களில் நிற்கும்படி செய்கிறதோ அதுதான் உண்மையான கல்வியாகும்.

## உண்மையான கல்வி

என் அன்பிற்குந்த மாணவச் செல்வங்களே! ஆன்மீகக் கல்வி, உலக நடைமுறைக் கல்வி ஆகிய இரண்டிலும் நமக்கு பிடிப்பு இருக்க வேண்டும். உரிமை இருக்க வேண்டும். இந்த இரண்டையும் அடித்தளமாக கொண்டே நமது கல்வி உருவாக வேண்டும். கல்வி என்பது மூளையே குழம்பிப்போகும் அளவிற்கு விஷயங்களை திணிப்பதல்ல. ஐந்து நல்ல, உயர்ந்த கருத்துக்களை அறிந்து கொண்டாலே போதும். அவற்றின் வழி உன் வாழ்க்கையை, உன் ஒழுக்கத்தை அமைத்துக் கொண்டால் நீயே நன்கு கற்றவனாகிறாய்.


வெறும் செய்திகளைத் தருவது தான் கல்வி என்றால் நூல் நிலையங்களே உலகில் மாபெரும் முனிவர்களாக இருக்குமே! நம் கல்வி ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு உலக நடைமுறைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். மேலும் வாழ்க்கையில் கடைப்பிடிக்கக் கூடிய பண்பாட்டுக் கல்வியாகவும் இருத்தல் அவசியம்.

**- சுவாமி விவேகானந்தர் -**

தொகுப்பு: **சி. அபிராமி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

A. vasanthiny

# பிரார்த்தனை



அஞ்ஜான திமிராந்தஸ்ய
ஜ்ஞுனாஞ்ஜன சலாகயா |
சக்ஷூருன் மீலிதம் யேன
தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

-குரு கீதை

**பொருள்:**

அஞ்ஞானமாகிய இருள் மூடிய குருடனுடைய கண், ஞானமெனும் மை தீட்டிய கருவியால் எவரால் திறக்கப்பட்டதோ அந்த குருவிற்கு நமஸ்காரம்.

உழிதரு காலும் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலம்எக் காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்த உன்னடியேன் செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே.

**இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.**
**40, இராமகிருஷ்ண வீதி, கொழும்பு 06.**

**அமுதம் 14** **துளி 3**

# இந்த இதழில்...


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரார்த்தனை | 01 |
| 2. | இதழாசிரியர்களிடமிருந்து... | 03 |
| 3. | கல்வி - கவிதை | 04 |
| 4. | குரு இன்றிப் பூரணமா? | 05 |
| 5. | குரங்குக்கு சொன்ன புத்திமதி - பஞ்சதந்திரக் கதை | 09 |
| 6. | ஐதரேய உபநிடதம் | 11 |
| 7. | குறுக்கெழுத்துப் போட்டி | 13 |
| 8. | புண்ணிய நதி யமுனை (III) - புண்ணிய நதிகள் | 14 |
| 9. | எளியோரைத் துன்புறுத்தாதே! - பாப்பா பாப்பா கதை கேளு | 18 |
| 10. | மனதை ஒருமுகப்படுத்தக் கற்றவன் மகான் ஆவான் - படித்துச் சுவைத்தவை | 20 |
| 11. | யோகம் | 22 |
| 12. | கடந்த இதழின் குறுக்கெழுத்துப் போட்டி விடைகள் | 27 |
| 13. | பயமறியாச் சிறுவர்களின் துணிகரச் செயல் - உண்மைச் சம்பவம் | 28 |
| 14. | கல்வியின் சிறப்பு - படக்கதை | 30 |
| 15. | கலியுக கற்பகதரு | 33 |
| 16. | தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் - சாதனையாளர் | 36 |
| 17. | உங்கள் கருத்து | 38 |
| 18. | செய்திகள் | 39 |

## இதழாசிரியர்களிடமிருந்து...

அன்பார்ந்த வாசகர்களுக்கு இனிய வணக்கங்கள். உலகிலுள்ள குருக்கள் அனைவரது ஜெயந்தி தினத்தையும் ஒருங்கே கொண்டாடும் நாளாகிய குருபூர்ணிமா தினத்தையொட்டி இம்முறை அறநெறி அமுதம் வெளிவருகிறது.


குருவானவர் எம் அனைவரது வாழ்விலும் முக்கிய இடத்தைப் பெறுபவர். குரு என்பவர் அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞான ஒளியைத் தருபவர். எவ்வாறு ஒரு விளக்கு தனது ஒளியில் இருந்து இன்னொரு விளக்குக்கு ஒளியைக் கொடுக்கிறதோ அது போல குருவானவர் தன் ஞானத்தால் சீடர்களின் அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞான ஒளியை வழங்குவார்.

"குருவின் பெருமை என்ன?" என பார்வதி சிவனைக் கேட்ட போது சிவன், "குருவும் கடவுளும் ஒன்றே" என்று கூறினார். எத்தனை வழிபாடுகளைச் செய்தாலும், எத்தனை தீர்த்த யாத்திரைகளை மேற்கொண்டாலும் குருவின் பெருமையை அறியாதவன் அறியாமையிலேயே மூழ்கிக் கிடக்கிறான். எமது மனதை சந்தேகங்களும் அறியாமையும் சூழ்ந்திருப்பதால் எம்மால் உண்மை அறிவைப் பெறமுடியவில்லை. வட மொழியில் 'கு' என்பது இருளையும் 'ரு' என்பது இருளை நீக்கும் ஒளியையும் குறிக்கிறது. குருவானவர் தன் ஒளியால் எம் அறியாமையை நீக்கும் போது எமக்கு உண்மை ஞானம் கிட்டுகிறது.

குரு ஒருவர் இல்லாமல் ஒரு மனிதனால் சரியான அறிவைப் பெற்றிட முடியுமா? இதற்குச் சிறந்த பதிலாக அமைந்த நாமதேவரின் வாழ்க்கைச் சம்பவங்களை வாசகர்கள் ஐந்தாம் பக்கத்தில் காணலாம்.

"குருவின் பாதம் பணிந்து ஆழ்ந்த பக்தியுடன் அவருக்குச் சேவை செய்யும் போது எமது பாவங்களெல்லாம் கரைந்துவிடுகிறது" என்று சிவன் பார்வதிக்குக் கூறுகிறார். தற்காலத்தில் மாணவர்கள் பலரும் தமது ஆசிரியர்களை மதிப்பதில்லை. இதனால் அவர்களால் சரியான விதத்தில் கற்கவும் முடிவதில்லை. எமது வாசகர்கள் அறநெறி அமுதம் கூறும் குருவின் பெருமையை வாசித்து உணர்ந்து ஆசிரியரின் அன்பையும் ஆசியையும் பெற்றுக் கல்வியில் சிறக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறோம். இதற்குத் துணையாக அமையும் இவ் அறநெறி அமுதத் துளியை எமது குரு சிரேஷ்டரான குருமஹராஜ், பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.

# கல்வி



பாதையைத் தடவியே திரிவார் - கண்
பார்வையில்லாத குருடர் - தாம்
போகும் வழியினை அறியார் - கல்வி
புகட்டப் படாத சிறுவர்

உடலினில் வலிமை இருந்தும் - கல்வி
ஊட்டப்படாதவர் வாழ்க்கை
புயலில் அகப்பட்ட துரும்பாய் - நோக்கம்
இன்றிச் சிதறுண்டு போகும்

குருடன் ஊன்று கோல் போல - கல்வி
உள்ளவர்க்கு உள்ளொளி துணையே
கருடனின் பார்வையைப் போல் - கல்வி
காட்டிடும் தூரப் பார்வை


ஊனக் கண் இல்லாத போதும் - கல்வி
உள்ளவர் நல்வழி செல்வார்
ஞானக்கண்ணா மன்றோ கல்வி - அதைப்
பயின்றிட நல்வழி விரியும்.



தொகுப்பு: ய. விருட்சிகன், தரம் 08,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## குரு இன்றிப் பூரணமா?

ஆடி மாதத்துப் பூரணை தினத்தில் வியாசர் அவதரித்தார். அவரது பிறந்த தினத்தை உலகில் தோன்றி மறைந்த அனைத்து குருக்களுக்கும் பொதுவான ஜெயந்தி தினமாக **'குருபூர்ணிமா'** என்ற பெயரில் இந்துக்களாகிய நாம் கொண்டாடுகின்றோம். இந்து தர்மத்தைப் பொறுத்தவரையில் குருவானவர் தெய்வத்திற்கு நிகராக மதிக்கப்படுகிறார். இதற்கு என்ன காரணம்? குரு என்ற ஒருவர் இல்லாவிட்டால் என்ன குறை? இப்படியான கேள்விகள் எம் மனதில் உதிப்பது இயற்கைதான். 'குரு என்று ஒருவரின் துணை இல்லாமல் பூரண ஞானம் அடைய முடியாதா?' என்றுகூட ஒருவர் சிந்திக்கலாம். இந்தக் கேள்விகளுக்குப் பதிலாக அமைகிறது நாமதேவரின் வாழ்க்கை.


பண்டரிபுரத்திலுள்ள 'விடோபா' கோயில்

நாமதேவர் இந்தியாவில் மஹாராஷ்டிராவில் பக்திமிக்க குடும்பத்தில் பிறந்தவர். அவர் குழந்தையாக முதன் முதலில் உச்சரித்த வார்த்தையே 'விட்டல' (கண்ணன்) தான். அவர் பாலகனாக, பெற்றோருடன் தினமும் பண்டரிபுரத்திலுள்ள கோயிலில் உறையும் 'விடோபா'வை (கண்ணனை) வழிபடச் செல்வார். ஒருநாள் பெற்றோருக்கு வேறு வேலை இருந்ததால் நாமதேவர் என்ற அந்தப் பாலகன் கண்ணனுக்குப் படையல் எடுத்துச் சென்றான். ஆனால் கண்ணனோ வரவில்லை. விவரம் அறியாத சிறுவன் வீறிட்டு அழுதான். பாலகனின் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கண்ட கண்ணன் மனித உருவெடுத்து அவன் தரும் படையலைச் சாப்பிட்டார். அன்றிலிருந்து நாமதேவர் கண்ணனின் நண்பனாகிவிட்டார். தினமும் அந்தக் கோயிலில் உள்ள கண்ணனுடன் கதைப்பதும் பஜனை செய்வதும் தான் அவனது பொழுதுபோக்கு.



இவ்வாறு அக் கோயிலிலுள்ள கண்ணனுடன் சரிசமமாகப் பழக முடிந்த நாமதேவர் இருபது வயதை அடைந்தபோது, அந்த சமயத்தில் வாழ்ந்த மற்றொரு ஞானியாகிய ஞானதேவர் உள்ளிட்ட மற்றும் பல ஞானிகளின் நட்பும் கிடைத்தது.




'விட்டல'
(கண்ணன்)

ஒருமுறை ஞானதேவர், நாமதேவரிடம் "நீ கண்ணன் மீது எவ்வளவுதான் பக்தி கொண்டாலும், ஒரு தகுந்த குரு இல்லாமல் உன்னால் பூரண ஞானம் அடைய முடியாது" என்றார். 'பண்டரிபுரத்துக் கண்ணனுடன் தினமும் பேசுகிறேனே, இதற்குமேல் என்ன பூரண ஞானம் இருக்கிறது?' என்று நாமதேவர் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அங்கு குயவர் தொழில் செய்யும் ஞானி கோராகும்பாரரும் மேலும் பல ஞானிகளும் இருந்தனர். அப்போது ஞானதேவர் கோரகும்பாரரை நோக்கி, "கோரா!, இங்கு எந்தப் பானைகள் இன்னும் நன்றாக சுடப்படவில்லை?" என்று கேட்டார். கோரகும்பாரரும் இதை அறிந்து மட்பானைகளை சோதிக்கப் பயன்படும் தடியை எடுத்து அங்கிருந்த ஒவ்வொருவரின் தலையிலும் தட்டிக்கொண்டு வந்து "அவை பக்குவப்பட்டிருக்கின்றன" என்று சொல்லிக் கொண்டு வந்தார். கடைசியாக நாமதேவரின் தலையைத் தட்டி, "ஓ...! இந்தப் பானை மட்டும் இன்னும் சரியாக சுடப்படவில்லை" என்று சொன்னார்.

இதைக் கேட்ட நாமதேவர் அவமானம் தாங்காமல் நேராகக் கோயிலுக்குச் சென்று கண்ணனிடம் முறையிட்டார். "கண்ணா! நான் இன்னும் பக்குவமடையவில்லை என்று கூறுகின்றனர்". அதற்குக் கண்ணன், "ஆம், நீ பக்குவமடைய வேண்டுமானால் ஒரு குருவை நாடவேண்டும்" என்றார். நாமதேவர், "இல்லை இல்லை.. நீதான் எனக்கு குரு" என்றார். அதற்குக் கண்ணன், "நீ பூரண ஞானத்தை மனித குரு மூலமாகவே அடையப் பெறுவாய்" என்றார். நாமதேவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே கண்ணர், "அப்படியானால் உனக்கு நான் ஒரு சோதனை வைக்கிறேன்" என்றார்.

நாமதேவர் அதற்குச் சம்மதித்தார். ஒருமுறை நாமதேவர் தெருவழியே சென்றுகொண்டிருந்தார். அவர் தையல்காரக் குலத்தைச் சேர்ந்தவர். அப்போது அவரை யாரோ "ஓ! தர்ஜி! (தையல்காரா) வா இங்கே..." என்று அழைத்தனர். திரும்பிப் பார்த்தால் ஒரு பட்டான்! 'பட்டான்' எனப்படுபவர்கள் பெரிய தாடி வைத்துக் கொண்டு மிகவும் உயரமான கட்டுடல் சரீரம் கொண்ட முகமதியர். தெருவில் பட்டான் ஒருவன் வந்தாலே கிராமத்து மக்கள் புலியைக் கண்டதுபோல் ஓடிவிடுவர்! அந்த பட்டானைக் கண்ட நாமதேவர் பயம் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினார். பட்டானும் கூவிக்கொண்டே வேகமாகப் பின்னால் வந்தான். இதைக் கண்ட நாமதேவர் "ஓ! இவன் கையில் சிக்கினால் என் கதை முடிந்தது!" என்று ஓடத் தொடங்கினார். பட்டானும் பின்னால் ஓடி வந்தான். நாமதேவர் ஓரே ஓட்டமாகப் பண்டரிபுரத்துக் கண்ணனிடம் ஓடிச் சென்றார். பட்டானும் துரத்திக் கொண்டு கோயிலுக்குள் வந்தான். என்ன ஆச்சரியம்! பட்டான் அப்படியே சென்று கண்ணனுடன் கலந்து விட்டான். கண்ணன் "பார்த்தாயா, உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லையே" என்றார். "இன்னொரு சந்தர்ப்பம் கொடு" என்று கெஞ்சினார் நாமதேவர். அதற்குக் கண்ணன் சம்மதித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு ஒருநாள் நாமதேவர் சாவுத்மாலி (தோட்டக்காரர்) என்ற ஞானியுடன் தோட்டத்தில் உரையாடிக்கொண்டிருந்தார். அப்போது அங்கே கீழ்ஜாதியைச் சேர்ந்த வழிப்போக்கன் ஒருவன் வந்து சற்றுத் தூரத்தில் உட்கார்ந்தான். தான் சாப்பிட வைத்திருந்த ரொட்டிகளைப் பரப்பி வைத்து, தோல்ப் பையில் நீரையும் வைத்துக்கொண்டு அவர்கள் இருவரையும் நோக்கி, "வாருங்கள் . சாப்பிடலாம்!" என்று அழைத்தான். நாமதேவரோ அவனுடைய சாப்பாட்டைச் சாப்பிட்டால் தன் ஜாதி போய்விடும் என்று பயந்தார். வழிப்போக்கனோ மறுபடியும் "சாப்பிட வாருங்கள்" என்று கூறியவாறு நாமதேவரை நோக்கிச் சென்றான். இதைக் கண்ட நாமதேவர் பயந்து ஓடத் தொடங்கினார். சாவுத்மாலியோ அந்த வழிப்போக்கன் உண்மையில் யார் என அறிந்து அங்கேயே இருந்தார். நாமதேவர் கண்ணன் கோயிலுக்கு ஓடிச் சென்றார்.



துரத்திக்கொண்டு வந்த வழிப்போக்கனோ கோயிலுக்குள்ளே சென்று கண்ணனுடன் ஐக்கியமானான்! கண்ணன், "பார்த்தாயா! இந்த முறையும் உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை!" என்று சொன்னார். நாமதேவரோ "இல்லை இல்லை! நீ ருக்மணியுடன் வந்தால் நான் நிச்சயம் கண்டுபிடித்து விடுவேன்" என்று சொன்னார். அதற்கும் சம்மதித்தார் கண்ணன்.

சில நாட்களுக்குப் பிறகு, ஒருநாள் நாமதேவர் பண்டரிபுரத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, அங்கிருந்து ஒரு மாட்டு வண்டிலில் பருத்த உடலைக் கொண்ட தம்பதியரும் அவர்களின் பிள்ளைகளும் வந்துகொண்டிருந்தனர். தூரத்திலிருந்து வந்துகொண்டிருந்த நாமதேவர் இவர்களைப் பார்த்து, "என்ன இது! பண்டரிபுரத்திலிருந்து வந்துகொண்டிருக்கிறார்களே, யார் இவர்கள்?" என அதிசயத்துடன் நின்று பார்த்துக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர்கள் உணவருந்துவதற்காக வண்டியை நிறுத்திவிட்டு, தாம் கொண்டு வந்த பெரிய அண்டாவை வைத்து நெருப்பை மூட்டிச் சமைக்கத் தொடங்கினர். வண்டியிலிருந்த கோழிகளைப் பிடித்து அப்படியே முழுதாக அண்டாவிற்குள் போட்டனர். இதைப் பார்த்து அருவருத்தார் நாமதேவர். கோழிகள் போதாது என்று அவர்கள் தங்களிடமிருந்த ஆடு ஒன்றையும் பிடித்து அப்படியே அண்டாவுக்குள் போட்டனர். "ஐயோ! இதுவும் எங்களுக்குப் போதாதே" என்று சுற்றிப் பார்த்தான் அந்தப் பருத்த மனிதன். அங்கிருந்த நாமதேவரைப் பார்த்து, "ஓ! அவனைப் பிடியுங்கள்" என்று சொன்னான். இதைக் கேட்ட நாமதேவர் தன் உயிருக்கு ஆபத்து எனப் பயந்து "கண்ணா! கண்ணா!" என்று கோயில் இருந்த திசையில் ஓடினார். அந்தப் பருத்த மனிதனும் அவனது மனைவியும் அவரைப் பிடிப்பதற்காக அவருக்குப் பின்னாலேயே ஓடினார்கள். நாமதேவர் ஓடிச் சென்று கோயிலுக்குள் நுழைந்தார்.

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்)

## பஞ்சதந்திரக் கதை

பெரிய மரங்கள் வளர்ந்த அடர்ந்த ஒரு காடு. அந்தக் காட்டில் ஒரு பெரிய குரங்குக் கூட்டம் வசித்து வந்தது. அப்பொழுது பனிக்காலம் வந்தது. குளிர் தாங்க முடியாமல் குரங்குகள் தவித்தன.



அச்சமயம் அந்தப் பக்கம் ஒரு மின்மினிப் பூச்சி பறந்து சென்றது. உடனே குரங்குகள் வெடுக்கென அதைப் பிடித்துக் கீழே போட்டு, அதன் மீது சருகுகளையும் அள்ளிப் போட்டன. பிறகு அதைச் சுற்றிலும் குரங்குகள் வட்டமாக உட்கார்ந்து கொண்டு, காலை நீட்டியும், வயிற்றைக் காட்டியும் குளிர் காய்வதாக நினைத்துப் பொழுது போக்கின. அதில் ஒரு குரங்கு, இன்னும் தீ பெரிதாக எரியட்டும் என்று, அதைப் 'பூ..பூ..' என்று ஊதவும் தொடங்கியது.

## குரங்குக்கு சொன்ன புத்திமதி

மரத்தின் மீதிருந்த 'சகிமுகி' என்னும் பறவை குரங்குகளின் இக்கூத்தைக் கண்டு, விழுந்து விழுந்து பலமாகச் சிரித்தது. உடனே கீழே இறங்கிவந்து, ஊதிக்கொண்டிருந்த குரங்கைப் பார்த்து, "நண்பா! வீணே ஊதாதே! அது நெருப்பல்ல. அது மின்மினிப் பூச்சி நீ என்னதான் ஊதினாலும் நெருப்பு உண்டாகாது." என்று சொல்லிற்று. அதைக் காது கொடுத்துக் கேட்காமல் அந்தக் குரங்கு, மீண்டும் மீண்டும் அச்சருகுக் குவியலை ஊதிக் கொண்டிருந்தது.



அதைக் கவனித்த அப்பறவை, மீண்டும் தன் அறிவுரையை விடாப்பிடியாக குரங்கிற்குச் சொல்லிற்று. அதனால் அக் குரங்கு சீற்றம் கொண்டது. "நீ எனக்குப் புத்திமதி சொல்ல வேண்டாம் போ!"என்று கோபத்துடன் கூறிற்று. இருந்தும் அப்பறவை விட்டபாடில்லை.



மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே இருந்தது. அதனால் கடுங்கோபமுற்ற அக்குரங்கு, அப்பறவையைப் பிடித்து, கல்லில் மோதி, அதைக் கொன்றுவிட்டது.

கேட்க விருப்பம் இல்லாதவனுக்கு அறிவுரை சொல்லி என்ன பயன்? கத்திகொண்டு பாறாங்கல்லை வெட்டமுடியுமா? அப்படி வெட்டினால் கத்தி தான் உடைந்து போகும்.

மூடனுக்குச் சொல்லும் உபதேசம் விழலுக்கு இறைத்த நீர் போல் வீணாகி விடும். உபதேசம் செய்பவனுக்கே ஆபத்து வந்தாலும் வந்துவிடும்.

**'மூடத்தனம் பொல்லாங்கை விளைவிக்கும்.'**

தொகுப்பு: இ. ரிசிகா, தொண்டராசிரியை
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

**யஸ்ய தேவே பராபக்திர் யதாதேவே ததா குரௌ |**
**தஸ்யைதே கதிதாஹ்யார்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மன: ||**

எவருக்கு தெய்வத்திடம் பக்தி உள்ளதோ, தெய்வத்திடம் போலவே குருவிடமும் பக்தி உள்ளதோ அந்த மகாத்மாவிற்கு உபநிஷதங்களில் கூறப்பட்ட பொருள்கள் தாமாகவே பிரகாசிக்கின்றன.

- சுவேதாசுவர உபநிடதம் -

# ஐதரேய உபநிடதம்

சென்ற இதழில் (அமுதம் 14, துளி 2 இல்) மஹிதாச ஐதரேயர் அருளிய ஐதரேய உபநிடதத்தின் முதல் அத்தியாயத்தைப் பார்த்தோம். கடவுள் எவ்வாறு ஐந்து உலகங்களைப் படைத்து, பஞ்சபூதங்களைப் படைத்து அவற்றிலிருந்து பிரம்மனையும் பின் மனிதனையும் மற்ற உயிரினங்களையும் படைத்தார் என விரிவாகத் தெரிந்து கொண்டோம்.


இவ்விதழில் கடவுள் மனிதனில் புகுந்து எவ்வாறு 'உயிர் உருவாதல்' என்னும் அதிசயச் செயலைப் புரிகிறார் என்பதையும், மனிதனில் ஆன்மாவாக விளங்குகின்ற பேருணர்வுப் பொருளே பிரபஞ்சத்தில் எங்கும் நிறைந்த இறைவனாக விளங்குகிறார் என்பதையும் விரிவாகப் பார்ப்போம்.

**⇒ 2ஆம் அத்தியாயம்**


ஒரு மனிதன் மூன்று பிறப்புக்களை எடுக்கின்றான் என்று இந்த உபநிடதம் கூறுகிறது. தந்தையிடமிருந்து தாயிடம் புகுந்தது முதற் பிறப்பு. தாயிடமிருந்து உலகில் பிறந்தது இரண்டாம் பிறப்பு. இந்த உடம்பிலிருந்து வெளியேறி மீண்டும் பிறப்பது மூன்றாம் பிறப்பு.

மரணத்திற்குப் பிறகு நல்வினை, தீவினைப் பயன்களை அனுபவிப்பதற்காக மறு உலகத்திற்குச் செல்வதையோ, மீண்டும் பூமியில் பிறப்பதையோ மூன்றாம் பிறப்பாகக் கொள்ளலாம்.

**⇒ 3ஆம் அத்தியாயம்**



மனிதனுக்கும் இறைவனுக்கும் என்ன தொடர்பு என்பதை ஆராய்கிறது இந்த அத்தியாயம். உலகின் இயக்கங்கள் கதிரவனால் நடைபெறுகின்றன. ஆனால் கதிரவன் எதிலும் நேரடியாக ஈடுபடுவதில்லை. அவனது முன்னிலையில் அனைத்தும் நடைபெறுகின்றன.



அதுபோல ஆன்மா ஒரு சாட்சியாக இருக்க, உயிர் உலகியல் இன்ப துன்பங்களை அனுபவிக்கிறது. பார்ப்பது, கேட்பது போன்ற அனுபவங்களுக்கு ஆதாரமாக இருப்பது ஆன்மா.

பேருணர்வுப் பொருளான ஆன்மா அனைத்தையும் கடந்ததாக இருந்தாலும் அனைத்துமாக விளங்குவதும் அதுவே. உடம்பின் இயக்கங்களாக, மனதின் இயக்கங்களாக அந்த ஆன்மாவே திகழ்கிறது. பிரபஞ்சநிலையில் பேருணர்வுப் பொருளான அந்த ஆன்மாவே இறைவனாக, அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது.

பேருணர்வுப் பொருளான ஆன்மாவே இறைவன் என்பதை அனுபூதியில் உணர்பவன் மரணமிலா நிலையை அடைகிறான் என்று கூறி இவ் உபநிடதம் முற்றுப் பெறுகிறது.

உலகம், மனிதன் மற்றும் உயிரினங்களின் படைப்பையும் ஆன்மாவெனும் பேருணர்வுப் பொருளே பிரபஞ்சத்தில் ஐம்பூதங்களாகவும் அனைத்துமாகவும் உள்ளும் புறமும் நீக்கமற நிறைந்துள்ளது என்னும் பேருண்மையையும் இவ் உபநிடதம் தெளிவாக விவரிக்கின்றது. திருமூலரின் திருமந்திரத்தில் ...


**“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளற் பிரானார்க்குவாய் கோபுரவாயில்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே”**

என்னும் பாடலும் இதையே நமக்கு விளக்குகின்றது.

அடுத்த இதழில் தைத்ரேய உபநிடதம் பற்றிய விரிவான விளக்கங்களை எதிர்பாருங்கள்.

ஆக்கம்: ஜெ.காயத்திரி, தரம் 10,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

# குறுக்கெழுத்துப் போட்டி




விடைகள் அடுத்த இதழில்...

**இடமிருந்து வலம்**

1. திருக்குறளின் ஆசிரியர்
2. முப்பொருள்களுள் ஒன்று
3. அறுவகைச் சமயங்களைப் பகுத்தவர் (திரும்பியுள்ளது)
4. பாண்டவர்களின் தாய்
7. திருமாலின் மறுபெயர் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

2. இறைவனை அடையச் சிறந்த மார்க்கம்
3. வியாச முனிவரின் மகன் (தலைகீழாகவுள்ளது)
5. ________ உன் பாதார விந்தம் துணை (தலைகீழாகவுள்ளது)
6. இராமனுக்குப் பக்தியுடன் கனி கொடுத்தவர்
8. யாகங்களின் போது தேவர்களுக்கு வழங்கப்படும் பாகம்

ஆக்கம்: வ. வானதி, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை




யமுனை - பாகம் III

யமுனை நதியைப் பற்றி இன்னொரு கதையும் கூறப்படுகின்றது - யமன் காலனாகிய பின்னர் தன் சகோதரி யமுனையைப் பார்க்க வருவதே இல்லையாம். இதனால் தன் தமையனைப் பார்க்காத ஏக்கத்துடனும் கவலையுடனும் இருந்தாள் யமுனை.

ஒருமுறை தனது மூத்த சகோதரியான யமுனையைப் பார்க்க கங்கை வந்திருந்தாள். அப்பொழுது தனது ஏக்கத்தையும் கவலை-யையும் கூறி வருந்தினாள் யமுனை. "கங்கா! என் உடன்பிறப்பான யமனைக் காண நான் மிக ஆவலாக உள்ளேன். கடின மனம் கொண்ட என் சகோதரன் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக என்னைக் காண வருவதே இல்லை" என்று கூறி வருந்தினாள். அதற்கு கங்கை "யமுனா! நீ வருத்தப்படாதே! இன்றே நான் உன் சகோதரனைச் சந்தித்து எடுத்துரைத்து அழைத்து வருகின்றேன். நீ அவரை வரவேற்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்" என்று கூறிய படியே கங்கை யமனின் இருப்பிடம் சென்றாள்.

யமனோ தன் பணியில் மும்முரமாக இருந்தான். கங்கையின் வரவு அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. கங்கையும் தான் வந்த காரணத்தைக் கூறினாள். தான் தங்கைக்குச் செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறிவிட்டதை நினைத்து வெட்கமடைந்தான் யமன். தனது பணிகளைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டுக் கங்கையுடன் தன் தங்கை யமுனையைக் காணச் சென்றான்.



யமனைக் கண்ட யமுனையின் ஆனந்தம் கரைபுரண்டோடியது. கோலமிட்ட புது மனையில் அவனை அமர்த்தி குங்குமத் திலகமிட்டுத் தீபாராதனை செய்தாள்.

அவனுக்குப் பிடித்த இனிப்புப் பண்டங்களைத் தன் கையாலேயே ஊட்டி மகிழ்ந்தாள். இதனால் சந்தோசம் மேலிட்ட யமன் யமுனையை அப்படியே அரவணைத்து "யமுனா! என்னை மன்னித்துவிடு. இனிமேல் இப்படி அசிரத்தையாக இருக்கமாட்டேன். உன்னைப் பல்லாண்டுகள் கழித்துப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன். நான் இங்கு வந்ததற்கு அடையாளமாக உனக்கு வரம் அளிக்க விரும்புகின்றேன். எது வேண்டுமானாலும் கேள்" என்றான்.

"அப்படியானால் சரி,, ஒரே ஒரு வரம் கேட்கிறேன். தீபாவ-ளியை ஒட்டி வரும் **த்விதீயையான** (த்விதி - இரண்டாம் நாள்) இந்நன்னாளில் ஒவ்வொரு ஆணும் தன் உடன் பிறந்தவளோடு எனது நீரில் நீராடினால் அவர்களை நீ நெருங்காதிருக்க வேண்டும். அவர்களுக்கு மரணமே ஏற்படக்கூடாது. இந்த வரத்தை எனக்கு அளிக்க முடியுமா?" என்றாள் யமுனை.



யமன் புன்சிரிப்புடன் "என் பிரியமான தங்கையே! மானிட உடல் அழிவற்றதல்ல. அழியவேண்டும் என்பது நியதி. இதைத் தடுக்க யாராலும் முடியாது. உனது கோரிக்கையில் சிறிது மாற்றம் செய்து இந்த வரத்தை உனக்கு அளிக்கின்றேன். சகோதர சகோதரிகள் ஒன்று சேர்ந்த இந்நன்னாளில் உன் நீரில் நீராடினால் அவர்கள் நீண்ட காலம் உயிரோடு வாழ்வார்கள். எப்பிணியுமின்றித் தீர்க்காயுளைப் பெறுவார்கள் போதுமா?. என் கடமை காத்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இப்புனித நாளில் உன்னைக் காண வருவேன்." என்றான். இந்த நன்னாளையே வட இந்தியர்கள் 'பாய் தூஜ்' (பாய் (Bhai) = சகோதரன் + தூஜ் = வளர்பிறைக்கு முந்திய இரண்டாம் நாள்) என்ற பண்டிகையாகக் கொண்டாடுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் யமன் தன் தங்கையைக் காண வருகின்றான் என்பது ஐதீகம். எனவே யமுனை பாயும் பிராந்தியங்களில் இப்பண்டிகை விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது.



இங்குள்ள ஆண்கள் தங்கள் சகோதரிகளின் இல்லம் சென்று பணமும் பரிசும் பாசத்துடன் வழங்குவார்கள். அன்று அச்சகோதரிகளின் இல்லங்களில் ஆடம்பரமான விருந்தும் நடைபெறும்.

மேலும் இந்நாளில் யமுனையில் நீராடினால் யம வேதனை பீடிக்காது நீண்ட காலம் உயிர் வாழலாம் என்பது ஐதீகம். யமுனை சூரிய பகவானின் புத்திரியாதலால் சூரியசம்பூதை, சூரியதனயா, ஆர்யஜா, ரவிநந்தினி என்ற பெயர்களாலும் மேலும் காளிந்தி, யமசுவஸா, சுத்தை, காமதை, சாந்தை, அனந்தை, சுபார்ங்கினா, விசுப்பூதை, வசுமதி, வசுப்பீரீதை என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகின்றார்.


யமுனையின் நீர் ஏன் நீலவர்ணமாகத் தெரிகிறதென்றால் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அடிக்கடி இந்நதியில் நீராடியதால் இந்நதியும் நீலநிறத்தை அடைந்தது எனச் சிலர் கூறுவர். இன்னும் சிலர் பரமசிவனுடைய பத்தினி தாட்சாயணி, தக்ஷன் யாகத்தில் உயிரை மாய்த்துக்கொள்ள, மகா கோபம் கொண்ட கைலைநாதன் அவரைத் தன் தோளில் போட்டுக் கொண்டு ருத்ர தாண்டவம் ஆடினார். இதனால் அண்டசராசரங்களும் ஆட்டம் கண்டன. தேவர்கள்



அஞ்சித் திருமாலைப் பிரார்த்திக்க அவர் தனது சுதர்சனச் சக்கரத்தால் தேவியின் அங்கங்களைச் சேதித்தார். தேவியின் உடற் பாகங்கள் முழுதும் வீழ்ந்த பின்னர் ஈஸ்வரன் யமுனை ஆற்றில் வீழ்ந்தாராம். யமுனையின் குளிர் நீர் அவரது தேகத்தையும் இருதயத்தையும் குளிர வைத்தது. ஆனால் ஆண்டவனின் உடல் உஷ்ணத்தால் யமுனை கறுப்பு வர்ணம் பெற்றது என்றும் கூறுவர். மேலும், இந்த யமுனை நதி தான் கிருஷ்ண பகவானுடைய பால்ய லீலைகளுக்கும் பராக்கிரம செயல்களுக்கும் சாட்சியாக உள்ளது.




கோகுலம், வடமதுரை, பிருந்தாவனம் முதலிய எழில் நகரங்களைப் பெற்றவள் யமுனை. வாசுதேவர் இரவோடு இரவாக யமுனையைக் கடக்க முயன்ற போது அவர் சுமந்து சென்ற பாலகனின் கால் விரல் நுனியில் நீர் பட்டவுடனேயே யமுனை தன் வெள்ளத்தை ஒதுக்கி வழி விட்டது. யமுனை ஆற்றில் உள்ள ஆழ்ந்த மடுவில் மறைந்திருந்து சுற்றுப்புறங்களை மாசுபடுத்த வந்த 'காளிங்கன்' எனும் ஐந்துதலை நாகபாம்பின் கொட்டத்தை அடக்கியதும் இந்நதியில் தான். இவ்வாறு பாலகிருஷ்ணனின் பால்ய லீலைகளுக்கும் பராக்கிரமங்களுக்கும் சாட்சியாக நிற்பவள் இந்த யமுனையே. இத்தகைய பெருமை மிக்க புனித யமுனை நதிக்கு வேறு என்ன வேண்டும்?



ஆக்கம்: **சோ. பிரஷோபிதா,**
பழைய மாணவி (தொண்டராசிரியை),
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

- எப்போதும் சுறுசுறுப்பாக ஏதாவது வேலையில் ஈடுபடவேண்டும். வேலையின்றி ஒருபோதும் இருக்கக்கூடாது. ஏனெனில் சோம்பியிருக்கும் போது, எல்லா விதமான தீய எண்ணங்களும் மனதில் தோன்றும்.

- செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று. உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும் சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும் இரவிலும் உன் முன் நிறுத்து அதிலிருந்து நல்ல செயல்கள் விளையும்.



**- சுவாமி விவேகானந்தர் -**

# பாப்பா பாப்பா கதை கேளு...

முள் வேலி ஓரமாகப் பறந்து கொண்டு இருந்தது ஒரு தும்பி. அது காலை நேரமானதால் ஒரு காகம் முள் வேலியில் அமர்ந்து தும்பியை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தது. சிறிது நேரம் ஆனதும் காகத்திற்கு அந்தத் தும்பியைப் பிடித்துச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை தோன்றியது.




உடனே காகம் அந்தத் தும்பியைப் பிடிப்பதற்குச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டே இருந்தது. தன்னைக் காகம் பார்த்துக்கொண்டு இருக்கிறது என்று தும்பிக்குப் புரிந்து விட்டது.

"காகமே எதற்காக என்னை இப்படிப் பார்த்துக் கொண்டே இருக்கிறாய்?" என்று கேட்டது தும்பி. உடனே காகம் சமாளித்தபடி, "உன் சுறுசுறுப்பைப் பார்த்து வியப்படைகிறேன்! நீ அடிக்கடி அங்கும் இங்குமாகப் பறந்து கொண்டு இருக்கிறாயே அதனை நினைத்து வியப்படைகிறேன்" என்றது.

**எளியோரைத் துன்புறுத்தாதே!**

இந்தக் காகம் "ஏன் திடீரென்று என்னைப் பாராட்டுகிறது? இதனிடம் ஏதாவது உள்நோக்கம் இருக்க வேண்டும். அதனால் தான் இது என்னை இப்படிப் பாராட்டுகிறது. இதனிடம் நாம் கவனமாக இருக்க வேண்டும்" என்று முடிவு செய்தது தும்பி.

தும்பி முள் வேலியைப் பற்றிய படி நிற்க காகம் அதன் அருகில் வந்தது. "தும்பியே இந்தக் காலை நேரத்திலேயே இவ்வளவு சுறுசுறுப்பாகப் பறந்து கொண்டு இருக்கிறாயே இந்தச் சுறுசுறுப்பை நீ யாரிடம் இருந்து கற்றுக் கொண்டாய்!" என்று கேட்டது காகம்.



"காகமே! இந்தச் சுறுசுறுப்பை நான் யாரிடமும் இருந்து கற்றுக் கொள்ளவில்லை. இது என்னுடன் பிறந்தது" என்றது தும்பி. காகம் மெல்ல மெல்ல பேச்சுக் கொடுத்தபடியே தும்பிக்கு மிக அருகில் வந்தது.



"நீ சொல்வது உண்மை தான் என்று எனக்கும் தோன்றுகிறது. ஏனென்றால் உன் சுறுசுறுப்பே அதனைக் காட்டிக் கொடுத்து விடுகிறது" என்றபடி தன் அலகினால் படக்கென்று தும்பியைப் பிடிக்க முயற்சி செய்தது.

உடனே தும்பியோ மின்னல் வேகத்தில் முள் வேலியை விட்டுப் பறந்து விட்டது. அந்த நேரத்தில் காகத்தின் அலகானது முள்ளில் மாட்டிக் கொண்டது. காகம் "கா... கா... கா..." என்று கத்தியது. அதனால் முள் வேலியில் இருந்து தன் வாயை வெளியே எடுக்க முடியவில்லை.

"இந்தச் சின்ன தும்பியைச் சாப்பிட வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அது முடியாமல் போய் நான் துன்பமடைந்து விட்டேனே" என்று காகம் தன் நிலையை நினைத்து வேதனைப் பட்டது.

**- எளியாரை வலியார் ஒறுத்தால், வலியாரைத் தெய்வம் ஒறுக்கும் -**

தொகுப்பு: **க. கலைவாணி**, பழைய மாணவி (தொண்டராசிரியை)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

உன்னை விட எளியோனைக் காணும் போது அவனை எள்ளி நகையாதே. அவன் மீது இரக்கம் கொள். முடிந்தால், அவனுக்கு உதவு. இந்த உலகத்தில் நிலைத்து இருக்கப் போவது பணம் அல்ல.நீ செய்த தருமம் தான்.

**- தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவி -**

# மனதை ஒருமுகப்படுத்துக் கற்றவன் மகான் ஆவான்

கல்வி என்பது மனத்தை, தான் படிக்கும் விஷயத்தின் மீது ஒருமுகப்படுத்தக் கற்றுக் கொள்வதில் தான் இருக்கிறது. மனத்தைக் கூர்மைப்படுத்துவது தான் தவம் என்று சொல்லப்படும். எல்லா அறிவுக்கும் மையப் பொருளாக இருப்பது மனக்கூர்மைதான்.



புகழ் பெற்ற முனிவராகிய வியாசரின் மகன் சுகதேவன். அவன் ஜனக மன்னரிடம் பாடம் கற்கப் போனான். முதல் மூன்று நாட்கள் மன்னனோ, மந்திரிகளோ, வாயிற் காப்பவர்களோ சுகதேவனைப் பொருட்படுத்தவே இல்லை. நான்காம் நாள் திடீரென அமைச்சர்களும், அதிகாரிகளும் திரண்டு வந்து சுகதேவனைப் பெரும் மரியாதையுடன் வரவேற்றனர். அரண்மனைக்குள்ளே அழைத்துப் போய் சுகமான அறையில் தங்க வைத்தார்கள். வாசனைத் திரவியங்களைப் பூசிக் குளிப்பாட்டி, சிறப்பான ஆடை அணிகலன்களைப் பூட்டினார்கள். எட்டு நாள் சிறந்த உணவைப் படைத்து ஆடம்பரத்தில் மூழ்கடித்தார்கள். தனக்குக் கிடைத்த அலட்சியத்தைப் பார்த்து சுகதேவன் வருத்தப்படவும் இல்லை; ஆடம்பரத்தைப் பார்த்து மனம் பேதலித்துப் போகவும் இல்லை.

**படித்துச் சுவைத்தவை**

அரண்மனை வாயிலில் காத்துக் கிடந்த போதும், ஆடம்பரத்தில் மூழ்கிக் கிடந்த போதும் அவன் மனம் ஒன்று போல் இருந்தது.

பிறகு அவனை மன்னன் முன் அழைத்து வந்தார்கள். மன்னன் சிங்காசனத்தில் அமர்ந்திருந்தான். இசை மற்றும் நடனம் முதலிய அரசவை நிகழ்ச்சிகள் நடந்த வண்ணம் இருந்தன. மன்னன் சுகதேவனிடத்தில் ஒரு கிண்ணத்தில் வழிய வழிய பாலை ஊற்றிக் கையில் கொடுத்தான்.



"அரசவை மண்டபத்தை ஏழு தடவைகள் சுற்றிவர வேண்டும். பால் ஒரு துளி கூட கீழே சிந்தக் கூடாது." என்று கூறினான். சுகதேவன் என்ற சிறுவன் கிண்ணத்தைக் கையில் எடுத்துக் கொண்டான் இசை முதலிய மனத்தை அலைக்கழிக்கும் நிகழ்ச்சிகளுக்கு இடையே மண்டபத்தை ஏழு தடவைகள் சுற்றி வந்தான். மன்னன் சொன்னபடியே ஒரு துளி கூட பால் சிந்தவில்லை. சிறுவனின் மனம் இசை, நடனம் எவற்றினாலும் மாற்றம் அடையவில்லை. அவன் எதில் மனத்தை ஈடுபடுத்தினானோ அதில் மட்டுமே மனம் சென்றது. இறுதியில் அவன் பால் கிண்ணத்தை மன்னனிடம் கொண்டு வந்து கொடுத்தான். மன்னன் சொன்னான்: "உன் தந்தை உனக்கு எல்லாவற்றையும் கற்பித்திருக்கிறார். நீயும் தானே கற்றறிந்திருக்கிறாய். இதைவிட நீ அறிவதற்கு வேறு ஒன்றும் இல்லை. உனக்கு சத்திய ஞானம் பிறந்துவிட்டது. நீ வீடு திரும்பலாம்."



சுகதேவன் பாரதம் கண்ட இலட்சிய ஞானி ஆவார். கல்வியின் அடிப்படை இலட்சியமே மனதை ஒருமுகப்படுத்துவது தான். மனதை ஒருமுகப்படுத்துகிற அளவுக்கு அறிவும் வளர்ச்சியும் அதிகமாகும். எனவே நாமும் மனத்தை ஒருமுகப்படுத்தி உள்நோக்கித் திருப்பினால் நமது கல்வியிலும் கடமையிலும் மனம் ஊன்றி நிற்போம்.

ஆக்கம்: **சி.சாம்பவி**, தரம் 11,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

நீ எங்கிருந்து எச்செயலைச் செய்து கொண்டிருந்தாலும் மனதை மட்டும் சதா சர்வகாலமும் தெய்வத் திருவடியில் வைத்திரு.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் -

# யோகம்

கடந்த இதழில் சூரிய நமஸ்காரத்தின் முதல் ஐந்து நிலைகளையும் பார்த்தோம். இந்த இதழில் அடுத்த மூன்று நிலைகளைப் பார்ப்போம். அதாவது ஆறு, ஏழு மற்றும் எட்டாம் நிலைகள்.

**ஆறாம் நிலை:**

1. செய்முறை:

- ஐந்தாம் நிலையிலிருந்து, முழங்காலை நேராக்கி உடலை முன்புறம் நீட்டவும்.
- உள்ளங்கைகளையும், கால் பாதங்களின்முன்பகுதியையும் அசைக்காமல் வெளிமூச்சு விட்டபடி நெஞ்சு, நெற்றி மற்றும் முழங்கால்களைத் தரையில் படுமாறு வைத்திருக்கவும்.
- வயிறு தரையில் படாமல் பிருஷ்ட பாகத்தை மேலே உயர்த்தி நிறுத்தவும்.

2. சுவாச நடை: வெளி மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:

- முழங்கைகளை உடலை ஒட்டி ஒடுக்கி வைக்கவும்.
- மூச்சினை வெளிவிட்டு நிறுத்தி வைக்கவும்.



4. பலன்கள்:


- சுயகட்டுப்பாடு வளர்ச்சி பெறும்.
- சாஷ்ட்டாங்க நமஸ்க்காரத்தின் பலன்களை அடையலாம்.

**ஏழாம் நிலை:**

1. செய்முறை:

- முதுகெலும்பை வளைத்து உள் மூச்சு வாங்கியபடி தலை, நெஞ்சு உள்ளிட்ட உடலின் மேற்பகுதியை (இடுப்பிற்கு மேல்) முன்புறம் நீட்டி மேலே உயர்த்தவும்.

* உள்ளங்கைகளையும் முன் கால்களையும் தரையில் அசைக்காமல் நிலையாக வைக்கவும்.



2. சுவாச நடை: உள் மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:

* முழங்கைகள் மடியாதவாறு நேராக இருக்க வேண்டும்.
* முழங்கால்களைத் தரையில் ஊன்றக் கூடாது.
* கால் கட்டை விரல்களைச் சேர்த்து நேரே நீட்டி வைக்கவும்
* கழுத்தை வளைத்து, கண்கள் மேலே பார்த்தவாறு இருக்க வேண்டும்.

4. பலன்கள்:

* தண்டுவடம் வளையும் தன்மையுடையதாகும்.
* நுரையீரலின் சுருங்கி விரியும் செயற்திறன் அதிகரிக்கும்.
* கைகளும் கால்களும் வலிமை பெறும்.
* தைராய்டு மற்றும் பராதைராய்டுகளின் செயற்திறன் அதிகரிக்கும்.
* புஜங்காசனத்தின் பலன்கள் அனைத்தும் கிடைக்கும்.


**எட்டாம் நிலை:**

1. செய்முறை:

* உள்ளங்கைகளும், பாதங்களும் தரையில் அழுத்தியபடி வெளிமூச்சு விட்டு பிருஷ்ட பாகத்தை மேலே தூக்கவும்.
* தலை முன்புறம் தொங்கிய நிலையில் தாடையால் நெஞ்சைத் தொடவும்.
* உடல் ஒரு மலை போன்ற வடிவத்தில் இருக்க வேண்டும்.
* குதிக்கால்கள் தரையைத் தொட்டபடி, முழுப்பாதங்களும் தரையில் அழுத்தி நிறுத்தவும்.

2. சுவாச நடை: வெளி மூச்சு

3. நுண்ணிய விடயங்கள்:



- முழங்கால்கள் மற்றும் முழங்கைகளை மடக்குதல் கூடாது.

4. பலன்கள்:

- சர்வாங்காசனத்தின் முக்கிய பலனாகிய தைராய்டு சுரப்பிகளின் சிறப்பு மிகு செயல்பாடு கிடைக்கும்.
- சலபாசனம், பார்சுவகோணாசனத்தின் பலன்களைப் பெறலாம்.
- பாதங்கள் சீராக வலிமை பெறும்.
- தசைகள் மற்றும் தொடை வலிமை பெறும்.

அடுத்து வரும் இதழ்களில் மிகுதி நிலைகளை எதிர் பாருங்கள்.

ஆக்கம்: **இ. பிரகலாதன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்)
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

## நீங்களும் எழுதலாம்...

*அறநெறி அமுதத்தில் நீங்களும் எழுத விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:*

மாணவர்களின் பண்பு வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்கும் பயன்படக்கூடிய

1. கதை
2. கட்டுரை
3. படித்துச் சுவைத்தவை
4. கேட்டுச் சுவைத்தவை
5. உண்மைச் சம்பவங்கள்

ஆகியவற்றை எழுதி "அறநெறி அமுதம்" எனக் குறிப்பிட்டு முன் அட்டையில் உள்ள முகவரிக்கு அனுப்பவும். பொருத்தமான ஆக்கங்கள் உரிய திருத்தங்களுடன் பிரசுரிக்கப்படும். ஆக்கத்தை அனுப்பும்போது உங்களைப்பற்றிய விபரத்தையும் எழுதி அனுப்புங்கள். இதழாசிரியர்களின் முடிவே இறுதியானது.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களும் கோயிலுக்குள் சென்று கண்ணனுடன் ஐக்கியமானார்கள். "பார்த்தாயா! ருக்மணியோடு வந்தும் உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லையே! இப்போது நீ குருவிடம் போகத்தான் வேண்டும்" என்று கண்ணன் கூறினார். வேறு வழியில்லாமல் நாமதேவர் இதற்குச் சம்மதித்தார். "அடுத்த பட்டணத்தில் விசோப கேசார் என்ற மகான் உள்ளார். அவரை நீ குருவாக ஏற்றுக்கொள்" என்று கண்ணன் சொன்னார்.



நாமதேவர் விசோபகேசாரைத் தேடிக் கால்நடையாகச் சென்றார். நீண்ட தூரம் நடந்தபிறகு, சாப்பிடுவதற்காக 'சந்திரபாக்' என்ற நதிக்கரையில் உட்கார்ந்தார். தான் கொண்டுவந்த ரொட்டிகளை எடுத்து சாப்பிடப் போகும்போது திடீரென ஒரு நாய் வந்து, ஒரு ரொட்டியை எடுத்துக்கொண்டு ஓடியது. நாமதேவர் அதை அடிப்பதற்கு விரட்டிச் சென்றும் பயனில்லாமல் திரும்பினார். மீண்டும் தனது பயணத்தைத் தொடங்கி, விசோபகேசார் இருக்கும் பட்டணத்தை வந்தடைந்தார். 'விசோபகேசார் என்பவர் எங்கிருக்கிறார்?' என அங்கு விசாரித்தார். அதற்கு அவர்கள், "அங்கிருக்கும் கோயிலில் இருக்கிறார்" என்றனர். அவரைத் தேடி அந்தக் கோயிலுக்குள் சென்றார் நாமதேவர். அங்கே கர்ப்பக்கிரகத்தில் பார்த்தால்... என்ன கொடுமை இது! ஒரு முதியவர் சிவலிங்கத்தின் மீது கால்களைப் போட்டு படுத்துக் கொண்டிருக்கிறாரே! நாமதேவர் அவரருகில் சென்று, "பெரியவரே! என்ன இது? சிவலிங்கத்தின் மீது கால் போட்டுப் படுத்துக் கொண்டிருக்கிறீரே! பெரியவராகிய நீர் செய்யக்கூடிய செயலா இது?" என்று கடிந்துகொண்டார். அதற்கு அந்தப் பெரியவர், "அப்பா! எனக்கு வயதாகி விட்டது. காலைத் தூக்குவதே கடினம். நீயே என் காலைத் தூக்கி சிவன் இல்லாத இடமாகப் பார்த்து வைத்துவிடு" என்றார். நாமதேவரும் அவரது காலைத் தூக்கி வேறு இடத்தில் வைத்தார்.

'ஐயோ! இங்கும் ஒரு சிவலிங்கம் இருக்கிறதே!' என்று காலைத் தூக்கி இன்னுமொரு இடத்தில் வைத்தார். அங்கும் ஒரு சிவலிங்கம் இருந்தது. அந்த முதியவர், "அப்பா! என் கால்கள் வலிக்கிறது. ஏதாவதொரு இடத்தில் வைத்துவிடு" என்றார். இப்படி அவரது காலை வைத்த இடமெல்லாம் சிவலிங்கம் இருந்தது. அப்போதுதான் நாமதேவருக்குப் புரிந்தது, கண்ணன் கூறிய விசோபகேசார் இவர்தான் என்று. அவரைத் தன் குருவாக ஏற்றுக்கொண்டு பூரண ஞானம் பெற்றுத் தன் கிராமத்துக்குத் திரும்பினார்.

திரும்பிப் போகும்போது அதே சந்திரபாக் என்ற நதிக்கரையில், சாப்பிடுவதற்காக ரொட்டி பொட்டலத்தை விரித்து வைத்து உட்கார்ந்தார். அப்பொழுது அங்கே ஒரு நாய் வந்து ரொட்டியை கௌவிக்கொண்டு ஓடியது. நாமதேவர் அதைத் துரத்திச் சென்று பிடித்து, "கண்ணா! ரொட்டி கடினமாக இருக்கும். அதற்கு வெண்ணை தடவித் தருகிறேன்" என்று கூறினார். "நாமதேவா! என்னை நீ எப்படிக் கண்டுகொண்டாய்?" என்று கேட்டார் நாய் வடிவில் இருந்த கண்ணன். "கண்ணா! இப்போது நான் புரிந்து கொண்டேன், நீ கோயில் விக்கிரகத்தில் மட்டும் அல்ல, அனைத்து இடத்திலும் வியாபித்துள்ளாய்" என்று பணிவோடு கூறினார் நாமதேவர்.



ஒருவன் கடவுளின் அனுபவத்தைப் பெற்றிருந்தாலும் குருவின் அவசியம் எத்தகையது என்பது இக் கதையில் தெரிகிறது. கடவுளே மனித உருவம் எடுத்து வந்தாலும் அவரும் குருவை ஏற்றுக் கொள்வார் என்பதை இந்து சமய வரலாற்றில் காணலாம். இராமருக்கு வசிஷ்டரும், கிருஷ்ணருக்கு சந்தீபனி முனிவரும் குருவானார்கள். அவதார புருஷரான ஸ்ரீ இராமகிருஷ்ணரும் தனது சொந்த சாதனையால் தேவி தரிசனம் பெற்றிருந்தாலும், பைரவி பிராம்மணி, தோதாபுரி ஆகியோரையும் தனது குருமார்களாக ஏற்றுக் கொண்டிருந்தார்.

எனவே ஒரு மனிதன் எந்த அளவுக்குப் புத்திசாலித்தனம் உடையவனாக இருந்தாலும், அவன் சரியான அறிவுப் பாதையில் நடந்து ஞானத்தைப் பெறுவதற்கு ஒரு குரு அவசியம் என்பது தெளிவாகிறது. குருவின் அருளே சகல ஞானத்தையும் தரும். குரு இன்றிப் பூரணம் இல்லை. அதனால் எங்கள் இந்து சமயத்தில் குருவை பிரம்மாவாகவும் விஷ்ணுவாகவும் சிவனாகவும் ஏன், பரம்பொருளாகவும் வணங்குகிறார்கள்.

**குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஷ்வர: |**
**குரு: சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||**

ஆக்கம்: **க. சொரூபன்**, பழைய மாணவன் (தொண்டராசிரியர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.


**கடந்த இதழில் பிரசுரிக்கப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சி | த் | 2 தி | ரை | | |
| ன | | ரு | | 3 சி | 4 ச |
| ம் | | 5 நீ | 6 தி | | ங் |
| | 7 உ | று | தி | | க |
| 8 கா | வி | | 9 அ | 10 வி | ட |
| 11 சி | த | ம் | ப | ர | ம் |

**உண்மைச் சம்பவம்**


உலகம் சுற்றும் வேகத்தை விட மனிதர்களின் மாற்றத்தின் வேகமே அதிகளவில் காணப்படுகிறது. இந்த வேகச்சுழற்சியில் பிறர் நன்மை கருதிச் செயற்படும் செயல்களின் எண்ணிக்கை குறைந்தளவிலேயே காணப்படுகிறது. இவ்வாறு இருப்பதை விட, தன் பிறப்பு இவ்வுலகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக அமைய வேண்டும் என்று நினைப்பவர்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகைய மூன்று சிறுவர்களைப் பற்றிய சம்பவம் தான் இது.

## பயமறியாச் சிறுவர்களின் துணிகரச் செயல்




இரண்டாயிரத்துப் பதின்மூன்று, மாசி மாதம் இருபத்தோராம் திகதி அன்று காளிமுத்து என்பவர் கேரளா என்னும் நகரில் கோட்டையம் என்னும் பிரதேசத்தில் மணிமலா என்னும் நதியில் நீராடும் போது வழி தவறி ஓர் பெருஞ்சுழியில் மாட்டிக்கொண்டு தவித்தார்.

அப்போது பதினொரு வயதான சுபின் மெத்தியூ (Subin Mathew) என்பவரும், பத்து வயதான அந்நில் பிஞ்யூ (Alnil Biju) என்பவரும், பதின்மூன்று வயதான யதுகிருஷ்ணன் (Yadukrishnan) என்பவரும் நதிக்கரையில் விளையாடிக் கொண்டிருந்தனர். காளிமுத்துவின் அலறலைக் கேட்ட இவர்கள் உடனே நதியில் பாய்ந்து தமது உயிரையும் பொருட்படுத்தாது அவரைக் காப்பற்ற முயன்றனர். நதியில் பாயந்த இவர்களில் ஒருவரான அந்நில் முதலில் அவருக்கு நேராகக் கையை நீட்டினார். ஆனால் காளிமுத்து அந்நிலை விட்டு சற்றுத் தொலைவில் இருந்தார். பின் யது தன் கையை நீட்டினார். அதுவும் பயனளிக்கவில்லை.



சுபின் , அந்நில் , யதுகிருஷ்ணன்

இறுதியில் சுபின் ஓர் வேட்டியை காளிமுத்துக்கு மேல் எறிந்து மூழ்க இருந்த அவரை நதிக்கரைக்குக் கொண்டு வந்தார். பின் அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு



சென்றனர். இச்சிறுவர்கள் தங்கள் உயிரைக் கூட பொருட்படுத்தாமல் சுவாமி விவேகானந்தர், மாலுமியைக் காப்பாற்றியதைப் போல் செயற்பட்டு காளிமுத்துவைக் காப்பற்றியுள்ளனர்.



"ஒருவரது ஆபத்து வேளையில் நீ உன் உயிரைக் கொடுக்கக் கூடத் தயங்காதே! உதவி கேட்டு வந்தவரை ஏமாற்றத்துடன் அனுப்பாதே; அடிப்பாகத்திலிருந்து ஓலை வரை முழுவதுமாய் பயன் கொடுக்கும் தென்னை மரம் போல, இப்புவியில் நீ பயனுள்ளவனாக இரு.

தொகுப்பு: ந. **சஞ்சீவன்**, தரம் 08,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை

- பிறருக்குக் கொடுப்பது நமது கடமை என அறிந்து, உதவி தேவைப்படுபவருக்கு உரிய நேரத்தில் அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்காமல் கொடுக்கவேண்டும்.


- உங்களுடைய வேலைகளைக் கடமையெனக் கருதி ஆற்றி, அவற்றின் பயன்களை ஆண்டவனுக்கு அர்ப்பணியுங்கள். உங்கள் நெஞ்சம் தூய்மை பெறும்.


**- சுவாமி விவேகானந்தர் -**

கதை: சி. அபிராமி


# கல்வியின் சிறப்பு

படம்: அ.அர்ச்சுனா





5
பொழுது புலரும் முன்பே விடிந்துவிட்டது என எண்ணி, அரண்மனை நோக்கி ஓடத்தொடங்கினான்.
6
நடு இரவில் கபிலன் ஓடிவருவதைக் கண்ட அரண்மனைக் காவலர்கள் அவனைத் திருடன் என எண்ணிக் கைது செய்தனர்.
என்ன தைரியம் உனக்கு!!!
7
விடிந்ததும் அரச சபைக்கு அழைத்து வந்தனர்.
அரசே! இவன் நேற்றிரவு அரண்மனையில் திருட வந்தவன்!!
8
கபிலன் நடந்த அனைத்தையும் கூறினான்.
தங்களை முதலில் காணவேண்டுமென்றே வந்தேன்.


9




10




11




துக்கம் என்பது அறியாமை காரணமாகத்தான் ஏற்படுகிறது. வேறு எதனாலும் அல்ல என்பதை, பட்டப்பகல் வெளிச்சம் போல் நான் தெளிவாகப் பார்க்கிறேன். ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது



அந்நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது. கல்வியால்தான் உண்மையான சிறப்பைப் பெற முடிகிறது.

-சுவாமி விவேகானந்தர்




உயிரினங்களின் ஒவ்வோர் செயலிலும் இன்பத்தின் தேடல் நிறைந்திருக்கும். அது அஃறிணையான ஓரறிவு முதல் ஐந்தறிவு படைத்த உயிரினங்களாகட்டும், உயர்திணையான ஆறறிவு படைத்த மனிதனாகட்டும் அதில் வேறுபாடு இல்லை.


மனிதன் நிலையான இன்பத்தினை நிலையற்றவைகளில் எப்போதும் தேடுகிறான். மேலும் இயற்கை ஒருகணம் இன்பத்தை வழங்கினாலும் மறுகணம் துன்பத்தையும் வழங்குகின்றது. இவ்வின்பதுன்ப வட்டத்தினுள் அகப்பட்டு அவன் வாழ்நாள் முழுவதும் கழிந்துவிடுகிறது. மனிதர்களுக்கு நிலையான ஆனந்தம் இறைவனை அடைவதே என பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை முறைமையும், உபதேசங்களும் வழிகாட்டி நிற்கின்றன.

ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கையில் மிக முக்கிய கட்டமான சாதனைக் காலப்பகுதியில் நாம் வந்து நிற்கிறோம். கதாதரனின் (ஸ்ரீராமகிருஷ்ணரின் இயற்பெயர்) சாதனை வாழ்க்கையைக் கூற வேண்டுமானால், முதலில் தட்சிணேஸ்வரம் காளி கோவிலைப் பற்றியும் அதனுடன் கதாதரனுக்கு எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது என்பதையும் கூறவேண்டியது கட்டாயம்.


ராணி ராசமணி

கல்கத்தாவின் தென்பகுதியில் ஜான்பசார் என்ற இடத்தில் ராணிராசமணி என்றபுகழ் பெற்ற பெண்மணி வாழ்ந்து வந்தார். அவர் மனதில் காசிக்குச் சென்று விஸ்வநாதரையும் அன்னபூரணியையும் தரிசித்து சிறப்பு வழிபாடுகள் செய்யவேண்டும் என்ற ஆசை நீண்ட நாட்களாக இருந்தது. அதனை நிறைவேற்றுவதற்காகத் தனது உறவினர்களுடன் காசிக்குச் செல்வதற்கு ஆயத்தமானாள்.

பயணத்திற்கு முதல்நாள் இரவு ராணியின் கனவில் காளிதேவி தோன்றி "நீ காசிக்குச் செல்லவேண்டியதில்லை. கங்கைக் கரையில் அழகியதோர் இடத்தில் என்னைப் பிரதிஷ்டை செய்து நாள்தோறும் நைவேத்திய வழிபாட்டிற்கு ஏற்பாடு செய். நான் அங்கு எழுந்தருளி உன் பூஜையை ஏற்றுக் கொள்வேன்." எனப் பணித்தருளினாள். கனவின் மூலம் காளியின் சித்தம் எதுவென்பதைப் புரிந்து கொண்ட ராணி ராசமணி காசிப் பயணத்தை நிறுத்தி, கங்கையின் கிழக்குக் கரையினில் காளிக்கு அழகான ஒரு கோயிலை எழுப்பினார். அக்கோவிலே தட்சிணேஸ்வரம் காளி கோவிலாகும்.



**தட்சிணேஸ்வரம் காளி கோவில்**

சந்தர்ப்பவசத்தால் அக்கோவிலுக்குப் பிரதம அர்ச்சகராக கதாதரனின் அண்ணனான ராம்குமார் ராணியினால் நியமிக்கப்பட்டார். ராம்குமார் பிரதம அர்ச்சகராகப் பணியாற்ற ஆரம்பித்ததனால் கதாதரனும் தட்சிணேஸ்வரத்திலேயே தங்க ஆரம்பித்தான்.

கங்கைக் கரை, பறவைக் கூட்டத்தின் இன்னிசையால் நிறைந்து இனிமை பரப்பிய பஞ்சவடி, விசாலமான கோவில், அங்கே பக்திமிக்க சாதகரான ராம்குமாரின் பூஜை, பெற்ற தந்தை போல் பேணிப் பரிவுகாட்டும் அவரின் அன்பு இவையனைத்தும் கதாதரனுக்கு தட்சிணேஸ்வர ஆலயத்தின் மீது ஈடுபாட்டை ஏற்படுத்தத் தொடங்கியது.



கதாதரனின் நல் இயல்புகள் ராணியின் மருமகனும், கோவில் தர்மகர்த்தாவுமாகிய மதுர்பாபுவினை மிகவும் கவர்ந்தது. மேலும் கதாதரனை கோவில் பணிகளில் அமர்த்துவது பற்றிச் சிந்திக்க ஆரம்பிக்கலானார்.

இக்காலப்பகுதியில், கதாதரனின் ஒன்றுவிட்ட சகோதரி ஹேமாங்கினியின் மகனான ஹிருதயராம் தட்சிணேஸ்வரம் வந்து சேர்ந்து கொண்டார். ஹிருதயராம், இவர் பிற்காலத்தில் கதாதரனின் சாதனை வாழ்க்கைப் பகுதியில் மிகுந்த உதவியாக இருப்பதைக் காணப்போகிறோம். மேலும் பிற்காலத்தில் ராமகிருஷ்ணர் தனது சீடர்களிடம், சாதனைக் காலத்தில் ஹிருதயர் மட்டும் இல்லையெனில் தம் உடலைக் காப்பாற்ற முடிந்திருக்காது எனக் கூறுவார்.



ஹிருதயர் தட்சிணேஸ்வரம் வந்த நாளிலிருந்து கதாதரனுடன் இணை பிரியாமல் இருந்து வந்தார். ஆனால் ஹிருதயர் ராம்குமாருக்கு உணவு பரிமாறும் சமயங்களில், மற்றும் மாலை வேளை ஆராத்தி நேரங்களில் கதாதரன் அவருடன் இல்லாமல் தனியாக எங்கோ சென்று விடுவான். பின்பு ஹிருதயர் எங்கு தேடினாலும் கதாதரனைக் கண்டுபிடிக்க முடிவதில்லை. ஓரிரு மணித்தியாலங்களில் வந்துவிடுவான். காரணம் கேட்டால் "ஏன்? நான் இங்கு பக்கத்தில் தானே இருந்தேன்" என்று மழுப்பிவிடுவான். சிலநேரங்களில் ஹிருதயர் தேடும் போது கதாதரன் பஞ்சவடிப் பகுதியிலிருந்து வந்து கொண்டிருப்பதை அவதானித்தார்.


பஞ்சவடி

ஹிருதயர் கதாதரனின் இந்த மர்மச் செயலுக்கான விளக்கத்தை அறிய, கதாதரன் பஞ்சவடி நோக்கித் தனியாகச் செல்லும் போது, ஒருநாள் ஹிருதயரும் பின் தொடர்ந்தார். ஹிருதயர் அங்கு கண்டவை அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்திற்று.

( மிகுதி அடுத்த இதழில் தொடரும்)


ஆக்கம்: உ. சசிதரன், பழைய மாணவன் (தன்னார்வத் தொண்டர்), இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

## சாதனையாளர்

நடைமுறை வாழ்க்கையில் தங்கள் சுயநலத்திற்காக மக்கள் பாடுபடுவார்கள். ஆனால் சுயநலமின்றி பிறர் நலத்திற்கு பாடுபடுபவர்கள் ஒரு சிலரே. அத்தகையவர்களுள் ஒருவரான திரு. செல்வகுமார் என்பவரைப் பற்றி இவ்விதழில் பார்ப்போம்.

# தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்

சமூகத்தின் பார்வையில் பணம், நேரம், சமூகத்தின் அங்கீகாரம் போன்றவை இல்லாவிட்டால், சேவை சாத்தியமற்றதாகக் கொள்ளப்பட்டுப் புறக்கணிக்கப்படுகிறது. இக்கருத்தினை உடைத்தெறிந்து **“சேவை செய்வதற்கு எவ்விதமான முதலீடும் தேவையில்லை. மாறாக, ‘சேவை செய்ய வேண்டும்’ என்ற எண்ணம் ஒன்றே போதுமானது”** என்பதை எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது இவரது வாழ்க்கை.



தமிழ் நாட்டிலுள்ள திருவள்ளூரில் வசிக்கும் செல்வகுமார் என்பவர் ஒரு தனியார் பாடசாலை ஒன்றில் உதவிப் பேராசிரியராகத் தொழில் புரிகின்றார். இவர் ஏறத்தாழ சுமார் பத்து வருடங்களாக திருவள்ளூரில் பாரியநல்லூர் எனும் இடத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலையை நடாத்தி வருகின்றார். இப்பாடசாலையில் ஏறக்குறைய நூற்றி எழுபது ஏழைச் சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். பெரும்பாலும் இச் சிறார்கள் ஆதரவற்ற பிள்ளைகளாகவே இருக்கின்றனர். செல்வகுமாரால் நடாத்தப்படும் பாடசாலையில் எவ்வித கட்டணமும் அறவிடப்படுவதில்லை. மாணவர்களுக்கு இலவசமாக கல்வியை வழங்கி வருகின்றார்.

இவரது பாடசாலையில் எட்டு ஆசிரியைகள் மிகவும் குறைந்த சம்பளமான 2000 ரூபாவைப் பெற்றுச் சேவை செய்கிறார்கள். ஆனால் இப்பாடசாலையை நிர்வகிப்பதற்கான பணத் தேவையை, செல்வகுமார் பலவழிகளில் சேகரிக்கின்றார்.



திரு. செல்வகுமார்

எவ்வாறு எனின், திருவள்ளூரில் இருந்து திருச்சிக்கு வந்து திருச்சி வீதியில் சனிக்கிழமைகளில் பாதசாரிகளினுடைய பாதணிகளைச் சுத்தம் செய்து நிதி திரட்டுகின்றார்.

தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் சமையல் வேலை, துப்பரவாக்கும் வேலை போன்ற வேலைகளையும் செய்து பணத்தைச் சேகரிக்கின்றார். இதைத் தவிர இவருடைய நற்சேவைக்காக நல்லிதயம் படைத்த சிலரும் நன்கொடைகளை அளிக்கின்றார்கள்.

**"ஏழைச் சிறுவர்களின் கல்விக்காக நான் எந்தத் தொழிலைச் செய்யவும் தயாராகவே உள்ளேன். தொழிலிலே என்ன உயர்வு, தாழ்வு? நோக்கமே உயர்ந்ததாக இருக்கவேண்டும்."** என்று கூறுகின்றார் இந்தச் செல்வகுமார்.



இவர் திருமணம் முடித்தவர். இவருக்கு 'லிங்கேஷ்வரன்' என்ற மூன்று வயதுடைய மகனும் உள்ளார். ஆனால் தான் சேவை செய்வது போல் தன் குடும்பத்தினரும் இவ்வாறு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. இவ்வாறு பலவித தொழில்களைச் செய்து சம்பாதிக்கும் பணம் பாடசாலையை நிர்வகிக்கப் போதுமானதாக இருக்குமா? என்பது கேள்விக்குறியே.

எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் தான் கொண்ட கொள்கையில் இருந்து பின்வாங்க மாட்டேன் என்ற நிலைப்பாட்டில் மிக உறுதியாக உள்ளார். தனது சமூக சேவைக்கு உதவுவதற்கு சிறிய ஊடகங்களின் அனுசரணை கிடைத்தால் நல்லது. அதைப் பயன் படுத்துவேன். ஆனால், எனக்கு விளம்பரம் தேவையில்லை. என்று தன்னடக்கத்துடன் கூறுகின்றார் இந்தச் செயல் வீரர் செல்வகுமார்.



'எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். உலகத்தையே மாற்றி அமைக்கக்கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்தே வெளிப்படுகிறது.'

**- சுவாமி விவேகானந்தர் -**


தொகுப்பு: **லோ. ராகுல்**, தரம் 09,
இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.

## உங்கள் கருத்து




இந்தப் படத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொள்ளும் பாடம் என்ன? உங்கள் கருத்துக்களை அண்ணளவாக 100 சொற்களில் எழுதி அனுப்புங்கள். சிறந்த ஆக்கம் உரிய திருத்தங்களுடன் அடுத்த இதழின் 'படம் தரும் பாடம்' பகுதியில் பிரசுரிக்கப்படும்.

## செய்திகள்



கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான வளாகத்தில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவச் சிலை மே மாதம் முதலாம் திகதி அன்று ஸ்ரீ. D. M. சுவாமிநாதன் (அறங்காவலர் - ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்) அவர்களின் தலைமையில் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தஜி மகராஜ் (கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர்) அவர்களால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் எண்ணற்ற பக்தர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.




---


இலங்கையில் சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்த ஆண்டு சிறப்பு நிகழ்வுகளில் ஒன்றான, நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி எழுதும் போட்டியில் தமது திறமையை சிறப்பாக வெளிப்படுத்திய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், 150 பாடசாலை நூலகங்களுக்கு சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையும் செய்தியும் உள்ளடங்கிய நூல்களை அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும் மே மாதம் 10ஆம் திகதி அன்று விவேகானந்த ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ஸ்ரீமத் சுவாமி சத்யக்ஞானானந்தஜி மகராஜ் (தலைவர், இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம், சென்னை) அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக திரு. S. முரளிதரன் (கல்விப் பணிப்பாளர், தமிழ் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளை மற்றும் கல்வி அமைச்சின் ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்டப் பிரிவு) அவர்களும், சிறப்பு விருந்தினராக திருமதி. சாந்தி நாவுக்கரசன் (பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்) அவர்களும் வருகை தந்து சிறப்பித்திருந்தனர்.







போதிமாதவனான புத்தபிரானின் ஜனனம் ஞான நிலை எய்தல், மற்றும் சமாதி நிலை ஆகிய மூன்று பெரு நிகழ்வுகளும் நடந்தேறிய வெசாக் பூரணை தினம் மே 14ஆம் திகதி அன்று எமது ஆச்சிரமத்தில் வெசாக் ஒளி விளக்குக் கூடுகளுடனான அலங்கரிப்போடு வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்று மாலை பேராசிரியர் W. விமலரட்ண தேரர் (தலைவர், கொழும்பு



பல்கலைக் கழகப் பொருளியல் பீடம்) அவர்களால் புத்தபகவானின் போதனையில் சில துளிகளும் அவற்றின் விளக்கமும் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் மே 18ஆம் திகதி அன்று எமது சமய பாடசாலை மாணவர்களால் பஜனை, பேச்சு, நடனம்,உரையாடல் ஆகிய நிகழ்ச்சிகளுடன் வெசாக் தினம் கொண்டாடப்பட்டது.

---

மே 31ஆம் திகதி அன்று மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் சிறுவர் பிரிவிற்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகளும் தன்னார்வத் தொண்டர்களும் விஜயம் செய்து அங்கிருந்த சிறுவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கி, அவர்களோடு அன்பாக அளவளாவி அச்சிறுவர்களது அன்றைய பொழுதை மகிழ்ச்சிகரமானதாக மாற்றினர்.

---



மே 4ஆம் திகதி அன்று ஸ்ரீ சங்கரர் மற்றும் ஸ்ரீ இராமானுஜர் ஆகியோரின் ஜெயந்தி தினம் ஆச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.



---

மே 4ஆம் திகதி அன்று எமது அறநெறி அமுதத்தின் 14வது அமுதத்தின் 2வது துளி கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி அதிபர் திரு. இராமையா அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது.




# படம் தரும் பாடம்

கடந்த இதழில் 'உங்கள் கருத்து' எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட படத்திற்கு எமது இராமகிருஷ்ண மிஷன் சமயப் பாடசாலையைச் சேர்ந்த தரம் 9 மாணவி க.கோசலா எழுதிய கருத்து...

குறித்த படம், குரங்கு ஒன்று நீர் அருந்துவதற்காக மற்றைய குரங்குகள் தமது பங்களிப்பை வழங்கும் நிலையை குறிக்கின்றது. ஒற்றுமையின் சிறப்பை உலகிற்கு எடுத்தியம்புவதாக இக்காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

சகல உயிர்களிடத்திலும் இறைவன் உறைகிறான் என்ற பரந்த கொள்கையை உலகிற்கு எடுத்துக்காட்டும் நம் சனாதன தர்மம், உயிர்களில் பாகுபாட்டை அவற்றின் அறிவின் அடிப்படையில் வேறுபடுத்திக்காட்டுகின்றது. அந்த வகையில் ஐந்தறிவு கொண்ட குரங்குகள் தாம் அடைய எத்தனித்த கருமத்தை தம் ஒற்றுமையின் சிறப்பால் அடைகின்றன.



ஆனால் ஆறறிவு கொண்ட மனிதனோ இனம், மதம், மொழி என பல்வேறுபட்ட அடிப்படையில் தமக்குள் சிதறுண்டு வாழ்கின்றான். இந்நிலையை உலக மாந்தருக்கு எடுத்துரைக்க முற்பட்ட ஒரு புகைப்பட கலைஞனின் மனவிம்பமே இப்படமாகும்.

ஒற்றுமை ஒன்றே சமூகம் நன்மை அடைவதற்குரிய வழியாகும். ஆகையால், இதை நன்கு அறிந்துணர்ந்து நேர்மையான நெறியைப் பின்பற்றி நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் செயற்பட்டால் எழுச்சி மிக்க சமுதாயத்தைக் கட்டி எழுப்பமுடியும்.

# உங்கள் சிந்தனைக்கு...



பல நாடுகளைக் கைப்பற்றி சக்கரவர்த்தியாக பெரும் புகழோடு வாழ்ந்த மாவீரன் நெப்போலியன், தனது இறுதிக் காலத்தில் நடைபெற்ற போர்களில் தோல்வி -யடைந்து, செயின்ட் ஹெலினா தீவில் கைதியாக இருந்தார். அவருடைய உடல் நலத்தைக் காக்க ஒரு மருத்துவரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஒருநாள் இருவரும் வயல்வெளியில் நடந்து கொண்டிருந்த போது எதிரில் ஒரு குடியானவப் பெண் வந்து கொண்டிருந்தாள். குறுகலான அந்த வரப்பில் ஒருவர் மட்டுமே போக முடியுமென்பதால், நெப்போலியன் வழி விடுவாரென அப் பெண் வரப்பில் ஏறினாள். அதைக் கண்ட மருத்துவர், "பெண்ணே! வருவது சக்கரவர்த்தி நெப்போலியன் என்று தெரியவில்லையா? அவருக்கு முதலில் வழிவிடு!" என்றார்.

உடனே நெப்போலியன், "மற்றவர்கள் விலகி வழிவிடுவதற்கு, இப்போது இருக்கிறவன் சக்கரவர்த்தி நெப்போலியன் அல்ல. இன்றைய நெப்போலியன் குடியானவப் பெண்ணிற்கும் வழிவிட வேண்டியவன்." என்று கூறியபடி அப்பெண்ணிற்கு வழிவிட்டு நின்றான்.

நெப்போலியன் வாழ்வில் உயர்வையும் தாழ்வையும் சமமாக பாவித்தவன். தோல்விகளை தவிர்க்க முடியாத ஒன்றாக ஏற்றுக் கொண்டவன். நாளைய இளைஞர்களாகிய நாமும் வெற்றிக்கு பொறுப்பேற்பது போலவே தோல்விகளுக்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள பழக வேண்டும். எம்முடைய தோல்விகளுக்கு நாமே காரணம் என்பதை உணர்ந்து அவற்றைத் திருத்திக் கொள்வதன் மூலமே வாழ்வில் உயர முடியும்.

அன்பளிப்பு ரூ. 10.00